[2022 மே 5

(ஆ) பொள்ளாச்சி தொகுதியில் உற்பத்தியாகும் தென்னை நார் பித்துக்கட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தேவையான கன்டெய்னர்கள் கிடைக்காததால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், என்ன சொல்கிறீர்கள்?*

முற்பகல் 11–30

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி பகுதியில் உற்பத்தியாகும் தென்னை நார் பித்துக்கட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, தென்னை நார் மஞ்சுகளை சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய போதிய container-கள் கிடைக்காததால் தற்போது இவற்றின் விலை மிகக் கடுமையாகக் குறைந்துள்ளது. இதனால், இப்பகுதியில் உள்ள இலட்சக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்பும் குறைந்து வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. வருவாய் இழப்பால் தென்னை நார் பித்துக்கட்டிகள் உற்பத்தியாளர்களின் வேலைவாய்ப்பு குறைந்ததால், தொழிலாளர்களிடம் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலை குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கவும், தேங்காய் ஒன்றிற்கு விலை மூன்று ரூபாயாகக் குறைந்திருப்பதனால், தென்னை விவசாயிகளிடம் ஏற்பட்டிருக்கிற மன வருத்தம் குறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் அண்ணன் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சற்று விரிவாக பதில் தர விரும்புகிறேன்.*

ஆசியா முழுவதும் கோவிட் பெருந்தொற்று பரவியபோது, நாடுகள் அமல்படுத்திய பொது முடக்கம், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தியை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

2022 மே 5] [திரு. தங்கம் தென்னரசு]

பல தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டதால், துறைமுகங்களிலும், உள்நாட்டு முனையங்களிலும் மிக அதிக எண்ணிக்கையில் Container-கள் தேக்கமடைந்திருக்கின்றன. மேலும், கடல் வழி சரக்குக் கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக Container-களைக் கையாளும் முக்கிய துறைமுகங்களுக்கு வந்து செல்லும் கப்பல்கள்மீது இது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால், மிகக் குறைந்த எண்ணிக்கையிலே Container பெட்டிகள் போக்குவரத்திற்குக் கிடைத்திருக்கின்றன. ஆகையால், சரக்கு கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகி, இந்தச் சூழ்நிலை இறக்குமதியையும், ஏற்றுமதியையும் மந்தமாக்கியதோடு, காலி Containerமூலம் நடைபெறும் போக்குவரத்து கணிசமாகக் குறைவதற்கும் வழிவகுத்திருக்கிறது. இந்த Container பெட்டிகளின் பற்றாக்குறை போக்குவரத்திற்குச் சென்று வரும் கால அளவு மற்றும் செலவை மிகுதிப்படுத்தியும் திறனற்றதாகவும் ஆக்கியிருக்கிறது. இதனால் Container shipment சுழற்சி, ஒரு cycle போல் வருவது இப்போது முடங்கியிருக்கிறது. இது இந்தியாவில் மிகப் பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இத்தாக்கம் உலகளாவியிருந்தாலும், இந்தியாவிலும் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. காரணம், இந்தியா பாரம்பரியமாக ஏற்றுமதியைவிட இறக்குமதியை அதிகமாகச் செய்யக்கூடிய நாடாக இருப்பதால், அதிகளவில் Container பரிமாற்றம் செய்யப்பட்டு வந்தது. இந்த குறைவான ஏற்றுமதியால், Container-கள் இல்லாமல் பயணங்களை மேற்கொண்ட Shipping நிறுவனங்கள் இந்தியாவிலிருந்த காலி Container-களை பிற நாடுகளின் தேவைகளைக் கருதி அந்த நாடுகளுக்கு அனுப்பிவிட்டன.

கோவிட் 19 தொற்றுக்காலத்தில் இறக்குமதி செய்ய சீனா மற்றும் பிற நாடுகளிலிருந்து வரும் சரக்குக் கப்பல்கள் 14 நாட்கள் வரை தனிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையில், குறிப்பாக சீனக் கப்பல்கள், இந்தியத் துறைமுகங்களுக்கு உள்ளே வருகிறபோது கடுமையான பரிசோதனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டார்கள்.

அதுபோல், பொது முடக்கக் காலத்தில் இந்தியாவிற்கு வரும் Container பெட்டிகள் அனைத்தும் இறக்குமதியாளர்களால் எடுத்துச் செல்லப்படாமல் அந்த முனையங்களிலே தேங்கியிருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியது. ஒருபுறம் இறக்குமதியில் சரிவு, மற்றொருபுறம் Shipping நிறுவனங்கள்

[திரு. தங்கம் தென்னரசு] [2022 மே 5

மூலமாக Container–களைக் காலி செய்து அனுப்ப இயலாத ஒரு சூழ்நிலை ஆகியவற்றால், ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டு, இந்தக் காலி Container–களுக்கு கடுமையான பற்றாக்குறை வந்திருக்கின்றது.

சமீபத்தில், இலங்கையில் நிலவிவரும் நெருக்கடி நிலைமை இந்த Transshipment–ன் செயல்பாட்டில் அதிகமான தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. அதனால், இலங்கை துறைமுகங்களில் நீண்ட காலமாக இந்த Container–கள் காத்திருக்கக்கூடிய ஒரு நிலை. சரக்கு கட்டணங்களினுடைய சுமை, மாற்று இடங்களைத் தேர்வு செய்ய கடல் பயணத்தின் திட்டங்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலை போன்றவையெல்லாம் இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த Transshipment–க்கு பெரும்பாலும் நாம் இலங்கையை நம்பியிருக்கக்கூடிய காரணத்தாலும், அதேபோல் நம் வர்த்தகத்தில் ஏறத்தாழ 80 சதவிகிதம் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அதற்கு பிறகு பரிமாற்றம் செய்யக்கூடிய நடவடிக்கை இருக்கிற காரணத்தினாலும், இது மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கியிருக்கிறது. இந்தச் சரக்குகள் தொலைதூர கிழக்கு நாடுகளுக்கும், பிற முக்கிய வர்த்தக நாடுகளுக்கும் அனுப்பப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், காலி Container–கள் வருவதில் ஏற்படும் தாமதம், இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதிக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. மேற்கூறிய பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவது அப்பாற்பட்டதாக இப்போது இருப்பதால், அந்தந்த நாடுகள் இதில் ஆற்றக்கூடிய பங்கும் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த நெருக்கடி நிலையிலிருந்து சீனா மற்றும் பிற நாடுகளின் வர்த்தக முனையங்கள் மீண்டு வரும்போது காலி Container–கள் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமென்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, காலி Container–கள் பரிமாற்றத்திலும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று கடல் சார்ந்த நிறுவனங்கள் தெரிவித்திருக்கின்றன. இருந்தாலும், தமிழ்நாட்டிலே பொள்ளாச்சி பகுதியில் இருக்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதனையும் இந்த அரசு நிச்சயமாகக் கருத்தில்கொண்டு, பொள்ளாச்சி பகுதியில் உற்பத்தியாகும் தென்னை நார் பித்துக்கட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, போதிய Container–கள்

2022 மே 5] [திரு. தங்கம் தென்னரசு]

கிடைப்பதற்கும், வருவாய் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கும், வேலைவாய்ப்பு குறையாமல் இருப்பதற்கும் அரசு, உரிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (குறுக்கீடு)

(இ) என்.எல்.சி. (NLC) நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி ஜெயராமன், நாம் நேரில் பேசிக்கொள்வோம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், சொல்லுங்கள்.

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1956 ஆம் ஆண்டு முதல், இதுவரை சுரங்கம்-1, சுரங்கம்-1A, சுரங்கம்-2 ஆகியவற்றிற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தியுள்ளது. சுரங்கம்-2-க்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களே, இன்னும் 20 ஆண்டுகளுக்கு மேல் நிலக்கரி வெட்டி எடுப்பதற்குத் தேவையான அளவு இருக்கின்றபோது, சுரங்கம்-3 பணிகளுக்காக 26 கிராமங்களில், சுமார் 12,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் போவதாக அறிவித்திருப்பது, அப்பகுதி மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே NLC நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு, NLC நிறுவனம் கொடுத்த வாக்குறுதியின்படி, குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஒரே பகுதியில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு பல்வேறு நில மதிப்பீடுகள் வழங்கப்படுவது வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. நாள் ஒன்றுக்கு NLC சுரங்கங்கள்மூலம் 72,000 கிலோ லிட்டர் தண்ணீர் பூமிக்கடியிலிருந்து உறிஞ்சி எடுத்து வெளியேற்றப்படுகிறது. இதனால் NLC சுரங்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 10 அடியில் இருந்த நீர்மட்டம் தற்போது 1000 அடிக்குமேல் சென்றிருக்கிறது. Corporate Social Responsibility-CSR நிதி என்று அழைக்கப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு நிதியை இந்தியா முழுவதும் செலவிடுகிறார்கள். அது கடலூர் மாவட்டத்தின் பிரச்சினைக்காக குடிநீருக்கும், விவசாயிகளுக்கும், பொது முன்னேற்றத்திற்காகவும் செலவிடப்பட வேண்டும்.